# அரச ஈட்டு, முதலீட்டு வங்கி சேமலாப நிதியம் - "பீ" - 2011

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

#### 1.1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச ஈட்டு, முதலீட்டு வங்கி சேமலாப நிதியம் - "பீ" இன் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பவற்றினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுப் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது கணிக்கப்பட்டு உறுப்பினர்களிற்கு செலவு வைக்கப்பட்டிருக்காத வட்டி முறையே ரூபா 132,762 மற்றும் ரூபா 122,505 ஆகும். ஆதலால், உறுப்பினர் கணக்குகள் மற்றும் குறைநிரப்பு பங்களிப்புகளிற்கு செலவு வைக்கப்பட்ட வட்டி ரூபா 255,567 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தமையை குறிக்கின்றது.

(ஆ) வட்டி வருமானம் தவறாக கணிக்கப்பட்டமை காரணமாக மீளாய்வாண்டின் போதான முதலீட்டு வருமானம் ரூபா 22,678 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்க்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| 1979 யூன் 01 வெள்ளிக்கிழமை ஆந்திகதிய 38/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி விதி 04 | உறுப்பினறக்ளின் செலவில் காணப்படுகின்ற சகல பணங்களும் ஏதாவது அரசாங்க வங்கிகளின் தொகுதிக்கடன்களின் அல்லது அரங்க பிணையங்களில் முதலீடு செய்யப்பட வெண்டும். எவ்வாறாயினும் சகல நிதிகளும் அரச ஈட்டு முதலீட்டு வங்கியில் நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாட்டினால் ரூபா 1,813,064 தொகையான வட்டியினை உறுப்பினர்களின் கணக்குகளிற்குச் செலவு வைப்பதனை விளைவித்திருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டில் உறுப்பினர் கணக்குகளிற்குச் செலவு வைக்கப்பட்ட ரூபா 2,121,491 ஆன வட்டியுடன் ஒப்பிடுகையில் ரூபா 308,427 அல்லது 14.54 சதவீதத்தால் வீழ்ச்சியைக் காட்டியது. மீளாய்வாண்டின் போது உறுப்பினர்களின் மொத்த பங்களிப்புகளின் வீழ்ச்சி அதேபோல் வட்டிவீதத்தின் வீழ்ச்சி என்பன எதிர்மறையான போக்கிற்கு பிரதான காரணமாக இருந்தன.

(ஆ) கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி, கடந்த 3 ஆண்டுகள் மற்றும் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் கீழே தரப்படுகின்றன.

| | | 2011 | 2010 | 2009 | 2008 |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்புக் கணக்குகளின் வட்டி வருமானம் | 1,675,320 | 1,976,387 | 2,417,405 | 1,775,210 |
| (ii) | உறுப்பினர் கடன்கள் மீதான வட்டி வருமானம் | 67,197 | 89,225 | 73,230 | 92,179 |
| (iii) | உருவாக்கப்பட்ட மொத்த வட்டி வருமானம் | 1,742,517 | 2,065,612 | 2,490,635 | 1,867,389 |
| (iv) | வரிச் செலவுகள் | (181,306) | (212,149) | (284,719) | (215,014) |
| (v) | தேறிய வட்டி வருமானம் | 1,561,211 | 1,853,463 | 2,205,916 | 1,652,375 |
| (vi) | அரச ஈட்டு முதலீட்டு வங்கியால் குறைநிரப்பு பங்களிப்பு | 251,853 | 268,028 | 626,569 | 497,011 |
| (vii) | உறுப்பினர்களிற்கு செலவு வைக்கப்பட்ட மொத்த வட்டி | 1,813,064 | 2,121,491 | 2,832,485 | 2,149,386 |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்புக் கணக்குகளின் வட்டி வருமானம் 2008 - 2011 வரையான காலப்பகுதியில் ரூபா 1,775,210 இலிருந்து ரூபா 1,675,320 ஆக அல்லது 5.63 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

ஆ) உறுப்பினர்களிற்கான கடன்கள் மீதான வட்டி வருமானம் 2008 - 2011 வரையான காலப்பகுதியில் ரூபா 92,179 இலிருந்து ரூபா 67,197 ஆக அல்லது 27.10 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

இ) குறைநிரப்பு பங்களிப்பு ரூபா 497,011 இலிருந்து ரூபா 251,853 ஆக அல்லது 49.32 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்த அதேநேரம், 2008 - 2011 வரையான காலப்பகுதியில் அங்கத்தவர்களின் செலவு வைக்கப்பட்ட மொத்த வட்டி ரூபா 12,149,386 இலிருந்து ரூபா 1,813,064 ஆக அல்லது 15.65 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்திருந்தது.

## 2.2 உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள்

கணக்காய்விற்குத் தரப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | |
|---|---|---|
| | 2011 | 2010 |
| | ரூபா | ரூபா |
| முன் கொண்டுவரப்பட்ட மீதி | 1,534,010 | 1,525,241 |
| கூட்டு: | | |
| ஆண்டின் போது உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள் | 120,000 | 200,000 |
| | 1,654,010 | 1,725,241 |
| கழி : | | |
| ஆண்டின் போதான அறவீடுகள் | 761,543 | 191,231 |
| முன்கொண்டு செல்லப்பட்ட மீதி | 892,467 | 1,534,010 |

2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2011 ஆம் ஆண்டில் உறுப்பினர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள் ரூபா 80,000 அல்லது 40 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2011 ஆம் ஆண்டில் அறவீடுகள் ரூபா 570,312 அல்லது 2.98 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 2.3 உறுப்பினர்களின் உதவுதொகை

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் உறுப்பினர்களின் கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட்ட உறுப்பினர் பங்களிப்பு வங்கி பங்களிப்பு வட்டி என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| | 2011 | | | | 2010 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **உறுப்பினர் களின் பங்களிப்பு** | **வங்கி பங்களிப்பு** | **செலவு வைக்கப் பட்ட வட்டி** | **மொத்தம்** | **உறுப்பினர் களின் பங்களிப்பு** | **வங்கி பங்களிப்பு** | **செலவு வைக்கப் பட்ட வட்டி** | **மொத்தம்** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| முன்கொண்டு வரப்பட்ட மீதி | 3,811,759 | 5,709,077 | 12,871,285 | 22,392,121 | 3,500,191 | 5,241,726 | 10,749,794 | 19,491,711 |
| கூட்டு : | | | | | | | | |
| ஆண்டின் போதான பங்களிப்பு | 292,647 | 438,971 | 1,813,064 | 2,544,681 | 311,568 | 467,351 | 2,121,491 | 2,900,410 |
| மொத்தம் | 4,104,406 | 6,148,048 | 14,684,349 | 24,936,802 | 3,811,759 | 5,709,077 | 12,871,285 | 22,392,121 |
| கழி: | | | | | | | | |
| ஆண்டின் போது செலுத்தப்பட்டவை | 778,857 | 1,166,196 | 2,532,997 | 4,478,050 | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| முன் கொண்டு செல்லப்பட்ட மீதி | 3,325,549 | 4,981,852 | 12,151,352 | 20,458,752 | 3,811,759 | 5,709,077 | 12,871,285 | 22,392,,121 |

2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2011 ஆம் ஆண்டில் நிதியத்திற்கான மொத்த பங்களிப்புகள் ரூபா 355,729 அல்லது 12.26 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் உறுப்பினர்களுக்கு ரூபா 4,478,050 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியானது இரண்டு முதல் மூன்று ஆண்டு காலத்திற்காக குறைந்த வட்டி வீதத்தில் நிலையான வைப்புக்களில் 4 சந்தர்ப்பங்களில் ரூபா5,762,473 ஆன தொகை முதலீடு செய்திருந்தது. 2011 ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து வட்டி வீதங்கள் விரைவாக அதிகரித்திருந்தது. நிதிகளை 3 மாதகால நிலையான வைப்புக்களைப் போன்ற குறுகிய காலத்தில் முதலீடு செய்யப்பட்டிருந்தால் நிதியம் ஆகக் குறைந்தது 3 % வட்டியை மேலதிகமாக உழைக்க முடிந்திருக்கும்.

| | | | வட்டி | |
|---|---|---|---|---|
| நிலையான வைப்பு இல | காலப்பகுதி | தொகை ரூபா | வீதம் | காலப்பகுதி |
| 12ரீ/2098 | 2011.11.16- 2013.11.15 | 1,130,356 | 9% | இரண்டு ஆண்டுகள் |
| | 2011.08.13- 2014.08.13 | 517,591 | 10% | மூன்று ஆண்டுகள் |
| 24ரீ/17307 | 2011.12.27- 2013.12.27 | 974,943 | 10.5% | இரண்டு ஆண்டுகள் |
| 36ரீ/3151 | 2011.09.29- 2013.09.28 | 3,139,582 | 9% | இரண்டு ஆண்டுகள் |
| | | 5,762,473 | | |

(ஆ) நிதியமானது பின்வரும் முதலீடுகள் சம்பந்தமாக முதிர்ச்சியடையும் திகதிகளுக்கு முன்னர் நிலையான வைப்புக்களை மீளப்பெற்றமை காரணமாக மொத்த வட்டியின் நட்டங்களை அடைந்திருந்தது.

| வைப்புக்களின் காலப்பகுதி | தொகை ரூபா | வட்டி வீதம் | மீளப்பெறல் திகதி | 2011 இல் வைத்திருந்த நாட்கள் |
|---|---|---|---|---|
| 2011.04.15- 2011.07.15 | 184,519.17 | 7% | 2011.06.09 | 52 |
| 2011.05.03- 2011.12.31 | 328,915.64 | 10% | 2011.06.09 | 36 |
| 2011.05.07- 2013.05.07 | 1,224,000.00 | 10% | 2011.06.09 | 32 |
| 2011.05.12- 2012.05.12 | 654,000.00 | 10% | 2011.06.09 | 29 |

(இ) ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புகள் மற்றும் ஏனைய பெறுவனவுகள் நிதியத்தின் நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. எவ்வித வட்டியும் உழைக்காமல் மீளாய்வாண்டின் போது இந்த நடைமுறைக் கணகக்கில் ரூபா 128,000 முதல் 1,000,000 வரையான வீச்சில் மீதி வைத்திருக்கப்பட்டது. அந்த வைப்புக்கள் அந்நேரத்தில் ஏழு நாள் அழைப்பு வைப்புக்கள் அல்லது குறுகியகால நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருக்குமாயிருந்தால் நிதியமானது ரூபா 28,000 இற்கு சமமான 7% வட்டியை உழைத்திருக்கலாம்.